**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 95** **நாள்: 11.07.2018**

**சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின்கீழ் ரூ.5 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட தியாகராயர் நகரில் உள்ள டாக்டர் நடேசன் பூங்கா மற்றும் ஜீவா பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் மற்றும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும் இன்று திறந்து வைத்தார்கள்.**

சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின்கீழ் (SMART CITY) ரூ.5 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட தியாகராயர் நகர், வெங்கட் நாராயணா சாலையில் உள்ள டாக்டர் நடேசன் பூங்கா மற்றும் கோபதி நாராயண சாலையில் உள்ள ஜீவா பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் மற்றும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும் இன்று (11.07.2018) திறந்து வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 578 பூங்காக்கள், 123 சாலை மையத்தடுப்புக்கள், 111 போக்குவரத்து தீவுத்திட்டு பூங்காக்கள் மற்றும் 163 சாலையோர பூங்காக்கள் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் 42 பூங்காக்கள் தனியார் அமைப்புகள், நலச்சங்கங்களினால் தத்தெடுப்பு முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள பூங்காக்கள் மண்டலங்கள் வாயிலாக நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இப்பூங்காக்களின் மொத்தப் பரப்பில் 70% பசுமைக்கும், மீதமுள்ள 30% பூங்கா தொடர்பான பிற பணிகளுக்கும் பயன்படுத்தலாமென முக்கிய கொள்கை முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் பசுமையை நல்ல முறையில் தொடர்ந்து பராமரிக்க தெளிப்பு நீர் பாசன சாதனங்கள் பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015–16, 2016–17 மற்றும் 2017–18 நிதியாண்டுகளில், மூலதன நிதியின் கீழ் ரூ.36.99 கோடி மதிப்பீட்டில் 30 எண்ணிக்கையிலான பூங்காக்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த 2015–16, 2016–17 மற்றும் 2017–20 ஆகிய நிதியாண்டுகளில் அம்ருத் (அடல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம்–AMRUT ) நிதி ஒதுக்கீட்டில் 51 பூங்காக்கள் ரூ.34.74 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, 27 பூங்காக்கள் தற்சமயம் பணி முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 24 பூங்காக்களின் பணிகள் நடைபெற்று வருகிறது.

வரும் நிதியாண்டில், சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் (Mega City) புதியதாக 33 எண்ணிக்கையிலான பூங்காக்கள் சுமார் ரூ.22.72 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோடம்பாக்கம் மண்டலம், வார்டு–136, வெங்கட் நாராயணா சாலை, தியாகராயர் நகர் பகுதியில் 14,766 ச.மீ பரப்பளவு கொண்ட ஏற்கனவேயுள்ள டாக்டர் நடேசன் பூங்காவில் ரூ.354.00 இலட்சம் மதிப்பீட்டில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு பூங்கா மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பூங்காவில், பார்வையற்றோரும் பயன்படுத்தும் வகையில் நடைபாதை, சிறுவர் விளையாட்டுத் திடல், கிரானைட் இருக்கைகள், மின்வசதி, பசுமை புல் தரை, பாரம்பரிய மரக்கன்றுகள், நிழற்கூடாரம், கைப்பேசிக்கான சூரிய ஒளியில் இயங்கும் சார்ஜர்கள், பெர்கொலா, கெசிபோ, திறந்தவெளி உடற்பயிற்சி தளம், கூழாங்கற்களிலான நடைபாதை, இயற்கை கருங்கல் நடைபாதை, செயற்கை நீரூற்று, அலங்கார மின் விளக்குகள், இறகு பந்து மைதானம், புல்தரையுடன் கூடிய செயற்கை குன்று மற்றும் C.C.T.V கேமரா ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்தப் பூங்காவில் 40 கிலோ லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள நிலத்தடி நீரின் பயன்பாடு குறைக்கப்பட்டு நிலத்தடி நீரின் உயரம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதில் உருவாகும் கசடு செடிகளுக்கு உரமாக பயன்படுத்தப்படும். இந்த நடேசன் பூங்காவினால் சுமார் 50,000 மக்கள் பயன்பெறுவர்.

சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் வார்டு–136, கோபதி நாராயணா சாலையில் 4782 ச.மீ பரப்பளவு கொண்ட ஜீவா பூங்காவில் ரூ.167.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பூங்காவில் பார்வையற்றோரும் பயன்படுத்தும் வகையில் நடைபாதை, சிறுவர் விளையாட்டுத் திடல், மின்வசதி, பசுமை புல் தரை, மரக்கன்றுகள், யோகா மேடை, நிழற்கூடாரம், கைப்பேசிக்கான சூரிய ஒளியில் இயங்கும் சார்ஜர்கள், திறந்தவெளி உடற்பயிற்சி தளம், கூழாங்கற்களிலான நடைபாதை, இயற்கை கருங்கல் நடைபாதை, அலங்கார மின் விளக்குகள், இறகு பந்து மைதானம், மற்றும் C.C.T.V கேமரா ஆகிய வசதிகள் அடங்கி உள்ளது. மேலும் இப்பூங்காவில் 10 கிலோ லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள நிலத்தடி நீரின் பயன்பாடு குறைக்கப்பட்டு நிலத்தடி நீரின் உயரம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதில் உருவாகும் கசடு செடிகளுக்கு உரமாக பயன்படுத்தப்படுகிறது. இப்பூங்காவினால் சுமார் 50,000 மக்கள் பயன்பெறுவர்.

மறுசீரமைக்கப்பட்ட தியாகராயர் நகர், வெங்கட் நாராயணா சாலையில் உள்ள நடேசன் பூங்கா மற்றும் கோபதி நாராயண சாலையில் உள்ள ஜீவா பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் மற்றும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர் சுபோத் குமார், இ.ஆ.ப., அவர்கள், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்த்தன் அவர்கள், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.சத்தியநாராயணன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**